**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 124/ 2023**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 23.01.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ராம்குமார்** | Age | : | |
| Father's Name | : | **சுப்பிரமணி** | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் இம் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | | காப்பீட்டு சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | | காயச்சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | | சிகிச்சை விவரக்குறிப்பு | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | | மருத்துவ ரசீதுகள் (ரூ.47,111/-) | அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் நான் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். நான்தான் இந்த வழக்கில் புகார்தாரர் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதற்கு பின்பு புலன் விசாரணை குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது. என் மீதுதான் தவறு என்று சொல்லி (பொருண்மை தவறு) காவல்துறையினரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதைதான் காரணம் என்றால் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரர் எந்த நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மனு விபத்து காயத்திற்கும் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3, 4 மற்றும் 5 ஆவணங்கள் நான் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எப்பொழுதும் வேலைக்கு செல்லாமல் வீட்டில்தான் உள்ளேன் என்றால் சரியல்ல. நான் கம்யூட்டராக வேலை செய்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.15 ஆயிரம் சம்பாதிப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.